# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 29 திங்கட்கிழமை 14.10.2024 கதிர் 387



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



# புலமைப்பரிசில் பரீட்சையை மீள நடத்த வேண்டிய அவசியமில்லை! பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவித்தார்

## சர்ச்சைக்குரிய 3 கேள்விகளுக்கும் அனைவருக்கும் புள்ளிகள்!



ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டிய அவசியமில்லை, என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இன்று தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விசேட செய்தியாளர் சந்திப்பை ஏற்பாடு செய்து, இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

அதன்படி, சர்ச்சைக்குரிய 3 கேள்விகளுக்கும் அனைவருக்கும் புள்ளிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சர்ச்சையான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மீளவும் நடத்தப்படுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்காக 7 பேர் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு கல்வி அமைச்சு அண்மையில் நடவடிக்கை எடுத்திருந்தது.

2➤

# அநுரவின் அரசியல் அலையில் அள்ளுண்டுபோக தமிழர் விரும்பவில்லை – மாற்றத்திற்காக வாக்கு!

## கோருகின்றது தமிழர் சம உரிமை இயக்கம்



தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகள் இதுவரை நிறைவேறாத நிலையில் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்திற்குள் அள்ளுண்டுபோக தமிழ் மக்கள் விரும்பவில்லை, என தமிழர் சம உரிமை இயக்கம் தெரிவித்துள்ளது. தூய மாற்றத்திற்காக வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் அது கோரிக்கை விடுத்துள்ளது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் பசுச் சின்னத்திலும் வன்னியில் பூட்டுச் சின்னத்திலும் போட்டியிடும் தமிழர் சம உரிமை இயக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான த.நிகேதன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

“ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் வழிப்படுத்தலில் மாற்றத்திற்கான தமிழ்த் தேசிய சக்தியாக தமிழ்த் தேசியத் தளத்தில் மக்கள் வாழ்வியலை மேம்படுத்தவே நாம் களம் கண்டுள்ளோம். தூய மாற்றத்திற்கான தமிழ்த் தேசியக் களத்தில் தமிழர் சம உரிமை இயக்கத்தினர் யாழில் பசுச் சின்னத்திலும் வன்னியில் பூட்டுச் சின்னத்திலும்

2➤





# தையிட்டியில் மதுபானசாலைக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம் - தையிட்டி பகுதியில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு முன்பாக வலி வடக்கு சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவகெங்கா சுதீஸ்னரிடம் மகஜர் ஒன்றும் வழங்கப்பட்டது.

2➤

# வெள்ளக் கட்டுப்பாட்டுக்கு நிலையான தீர்வு ஜனாதிபதி அநுரகுமார வலியுறுத்தினார்



அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கு சரியான மற்றும் நிலையான வேலைத்திட்டம் அவசியம் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் களுத்துறை மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குப் பணியை முதன்மைப்படுத்துமாறும், அதன் பின்னர், சேதமடைந்த சொத்துக்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஏற்கனவே கூடுதலாக

2➤

# கொழும்பு வலயப் பாடசாலைகளுக்கு நாளைய தினமும் விடுமுறை!

கொழும்பு கல்வி வலயத்திலுள்ள அனைத்து பாடசாலைகளையும் நாளையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலையை கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மேல்மாகாணப் பதில் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு இன்றைய தினமும் விடுமுறை

2➤

## அநுரவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுயாதீனமாகப் போட்டியிடுகின்றனர்.

தமிழ் மக்கள் யுத்தத்திற்குப் பின்னரான 15 ஆண்டுகளில் தற்போது களத்திலுள்ள அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் நம்பிக் களைத்து விட்டனர்.

நாம் இதுவரை வாக்களித்துத் தெரிவுசெய்தவர்கள் தங்களுக்குள் அடிபடுவதிலும் சுகபோகங்களை அனுபவிப்பதிலும் அதனைவிட பார் பெர்மிட் பெற்று மக்களைப் போதைக்கு அடிமையாக்கி இளையோரை அழிக்கத் துணை போகின்றனரே அன்றி மக்களுக்கான எந்த நல்ல விடயங்களையும் செய்யவில்லை.

தமிழர் தரப்பின் இந்த கையறு நிலையில் தெற்கில் மாற்றத்தை ஏற்படுத்தியோர் வடக்கிலும் காலூன்ற முனைகின்றனர். தமிழர்களுடைய அடிப்படை அபிலாசைகளை சமஷ்டி முறை இணைந்த வடகிழக்கு மாநிலமோ சம உரிமைகளோ இன்னும் கிடைக்காத நிலையில், தெற்கின் அலையில் அள்ளுண்டு போக தமிழ் மக்கள் விரும்பவில்லை.

காலத்தின் தேவை கருதி குறுகிய அவகாசம் இருப்பினும் மாற்றத்திற்கான தூய பொது முகங்களாக சமூகத்தின் சகல தளங்களிலிருந்து தமிழ்த் தேசிய மனிதநேயச் செயற்பாட்டாளர்களான நிபுணர்களும் பெண்களும் இளையவர்களும் தியாக வேள்வியில் இளமைக்காலத்தை அர்ப்பணித்த தமிழ்த் தேசிய போராளிகள், மாற்றுத்திறனாளிகள் என அனைவருக்கும் நாம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம்.

தொகுதிவாரியாக பொறுப்புக்கூறும் கடப்பாட்டுடன் நிறுத்தப்பட்டுள்ள எமது பொது முகங்களான முதன்மை வேட்பாளர் கல்வியியலாளர் கலாநிதி தே.தேவானந்த், ஊடகவியலாளர் ந.பொன்ராசா, சட்டத்தரணி ஜெ.நீலலோஜினி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்னாள் உப அதிபர் அ.சிவஞானம் உள்ளிட்ட வேட்பாளர் குழாம் யாழில் பசுச் சின்னத்திலும், தமிழ்த் தேசியப் போராளி முல்லை ஆனந்தன், முல்லையின் பட்டதாரி இளைஞர் கோகுலன், வன்னி மாற்றுத்திறனாளிகள் சங்க வவுனியா உபதலைவர் சாந்தகுமார், தேசிய மீனவர் ஒத்துழைப்புச் சங்க மன்னார் செயலாளர் திருமதி பாமினி உள்ளிட்ட குழாமினர் வன்னியில் பூட்டுச் சின்னத்திலும் போட்டியிடுகின்றனர். இவர்களை ஆதரித்து தமிழ்த் தேசிய மறுமலர்ச்சிக்கு வழி வகுக்க வேண்டுகின்றோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளம் மற்றும் ஏனைய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை அளிப்பது தொடர்பில் கல்வி அமைச்சு விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவது தொடர்பில் மாகாண பிரதம செயலாளர், மாகாண கல்வி செயலாளர் அல்லது மாகாண கல்விப் பணிப்பாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

தற்போது நிலவும் காலநிலை காரணமாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## தையிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம்பலம், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (01)

## புலமைப்பரசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த வருட புலமைப்பரிசில் பரீட்சையில் சில வினாக்கள் கசிந்தமையினால் சிக்கலான சூழ்நிலை உருவானதுடன், பரீட்சைகள் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளையும் ஆரம்பித்திருந்தனர்.

மீளவும் பரீட்சையை நடத்தவேண்டும், என்று ஒரு தரப்பினர் கோரிக்கையை முன்வைத்த அதேவேளை, சிறுபிள்ளைகளை அதிக அழுத்தத்துக்கு அது உள்ளாக்கும் என மற்றொரு தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சில கேள்விகளை பரீட்சைக்கு முன்னர் கசியவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் மற்றும் பாடசாலை ஆசிரியர் ஒருவர் ஆகியோரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவலை நீதவான் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (04)

# தேர்தல்கள் ஆணைக்குழுவில் நாளை விசேட சந்திப்பு

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் இடையிலான சந்திப்பு நாளை (15) நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை காலை 9.30 மணிக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் வளாகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு அரசியல் கட்சிகளின் செயலாளர்களும் தேர்தல் ஆணைக்குழுவும் சந்திப்பு இதுவே முதல் முறையாகும்.

அதன்படி, ஒரு வேட்பாளருக்கு செலவிடப்படக்கூடிய குறைந்தபட்சத் தொகையும் நாளை தீர்மானிக்கப் படவுள்ளது. அதன் பின்னர் இது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தவிர, தேர்தலுக்கான நடவடிக்கைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

## வெள்ளக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒதுக்கப்பட்டுள்ள 50 மில்லியன் ஷரூபாவுக்கு மேலதிகமாக பணம் தேவைப்படுமாயின் அதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

இவ்வருடத்தில் இதற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளத்தின் போது சேதமடைந்த சொத்துக்கள் புனரமைக்கப்படாத மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான இழப்பீடுகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (04)

# அடுத்த 24 மணி நேரத்திற்கு வெளியான எச்சரிக்கை

அடுத்த 24 மணி நேரத்திற்கு தெற்கு வங்கக் கடலோரப் பகுதிகளில் கனமழை பெய்வதோடு, பலத்த காற்றுடன் கடலும் சீற்றத்தோடு இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்கிழக்கு வங்கக் கடலில் இன்று குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இது அடுத்த 2 நாட்களில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக உருவாகி, மேற்கு - வடமேற்குத் திசையில் வட தமிழகம், புதுச்சேரி மற்றும் அதை ஒட்டிய தெற்கு ஆந்திரா கடற்கரையை நோக்கி நகரும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வடக்கு அட்சரேகை மற்றும் கிழக்கு தீர்க்கரேகைக்கு இடைப்பட்ட கடல் பகுதிகளில் 60 -70 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்றுடன், கனமழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதோடு, கடல் சீற்றத்துடன் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் காணப்படும் வரைபடத்தில் "எச்சரிக்கை" பிரிவின் கீழ் குறிக்கப்பட்டுள்ள கடல் பகுதியில் மறு அறிவிப்பு வரும்வரை கடலில் பயணம் செய்ய வேண்டாம் என கடற்படை மற்றும் மீனவ சமூகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக வெளியிடப்படும் எதிர்கால அறிவிப்புகள் குறித்து மீனவர்கள் மற்றும் கடல்சார் சமூகத்தினர் கவனம் செலுத்துமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (04)

# மன்னார் காற்றாலைத் திட்டம் மீள்பரிசீலனை

மன்னார், விடத்தல் தீவு பகுதியில் இந்திய அதானி நிறுவனத்தினால் காற்றாலை மின் நிலையத்தை உருவாக்கும் திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

காற்றாலை மின்நிலையத்தை அமைப்பது தொடர்பாக இலங்கை அரசுக்கும் இந்திய அதானி நிறுவனத்துக்கும் இடையிலான ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய உத்தரவிடக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் இன்று மன்றில் அழைக்கப்பட்ட போதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கலாநிதி அவந்தி பெரேரா இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (04)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்


4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட


காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தினது உதவிச்செயலாளர் ஜனாதிபதியைச் சந்தித்தார்!



ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்துள்ளார்.

ஆட்சி நிர்வாகம், அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் முறைமை என்பன தொடர்பில் இதன்போது முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

“பல்பரிமாண அபாய சூழ்நிலைகளைப்புரிந்துகொள்வது மற்றும் இலங்கை மக்கள் மீதான அவற்றின் தாக்கம்” என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதிநிதியினால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் பூரண ஆதரவை வழங்கும் எனவும் பிரதிநிதி உறுதியளித்திருந்தார்.

அத்துடன் இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் ஆதரவை வழங்க விருப்பம் தெரிவித்த உதவிச் செயலாளர் நாயகம், ஊழலைக் குறைப்பதில் முக்கிய கருவியாக டிஜிட்டல் மயமாக்கலைப் பயன்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அதன்போது தேர்தல் முறைமைச் சீர்திருத்தங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், அனைத்து இன மற்றும் மத சமூகங்களையும் உள்ளடக்கிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான சீர்திருத்தங்கள் அமையும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் தெரிவித்திருந்தார்

நுண்கடன் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், அத்துறையின் வட்டி வீதங்கள் நியாயமாக இல்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதிக பெண்களை உள்வாங்குவதன் மூலம் நுண்நிதித் துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய அபிவிருத்தி வங்கியொன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், மூலதனத்தைப் பாதுகாப்பதற்காக பெண் தொழில் முயற்சியாளர்கள் முன்வைக்கும் சிறந்த முன்மொழிவுகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களை வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா, மூலோபாய ஈடுபாடு, டிஜிட்டல் மற்றும் புத்தாக்கக் குழுவின் தலைவர் பாதில் பாக்கீர் மாக்கார் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

# தேசத் திரட்சிக்காக மக்கள் வாக்களிக்கவேண்டும்! பொதுக்கட்டமைப்பின் நிலாந்தன் கோரிக்கை

நாணயமானவர்களுக்கும்கறைபடியாதவர்களுக்கும் தேசத் திரட்சிக்காக உழைப்பவர்களுக்கும் மக்கள் வாக்களிக்க வேண்டும்!, என பொதுக்கட்டமைப்பைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் அவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் பொதுச்சபை ஜனாதிபதித் தேர்தலைக்




கையாண்டது போன்று, மற்றைய தேர்தல்களைக் கையாள முடியாததால் நாடாளுமன்ற தேர்தலில் விலகி இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் பாவித்த சங்குச் சின்னத்தை வேறு தேர்தல்களில் பாவிக்க வேண்டாம், என கோரினோம். கட்சிகள் விரும்பி இருந்தால் சங்குச் சின்னத்தை எடுக்காது இருந்து இருக்கலாம். அதனையும் மீறி எடுத்துள்ளார்கள்.

தற்போது சங்குச் சின்னத்திற்கும், தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும், பொதுக் கட்டமைப்புக்கும் எந்த தொடர்பும் இல்லை.

தமிழ் மக்கள் பேரவையின் கூர்ப்பே தமிழ் மக்கள் பொதுச்சபையாகும். பொதுச் சபை அடுத்த கூர்ப்புக்குப் போன பின்னரே தேர்தல்களை எதிர்கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் பொதுச்சபை ஜனாதிபதித் தேர்தலில் தேசத் திரட்சியை எதிர்பார்த்து, அதில் வெற்றியும் பெற்றோம். அது சில நாட்களில் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்புடன் மீளச் சிதறியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் பலம் தமிழ் மக்கள் பொதுச்சபையிடம் இல்லாததால், அதில் இருந்து விலகி இருக்கிறோம். எனவே மக்கள் நாணயமானவர்களுக்கும் கறைபடியாதவர்களுக்கும் தேச திரட்சிக்காகவும் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

சங்குச் சின்னம் புனிதமானது இல்லை. அதற்கு யாரும் உரிமை கோர முடியாது. அது ஒரு பொது நிலைப்பாட்டிற்கான குறியீடு. பொதுக்கட்டமைப்பில் இருந்த பலர் வெளியில் நிற்கும் போது சிலர் மட்டும் அதனைப் பயன்படுத்துவது அறமில்லை.

சங்குச் சின்னத்திற்கு, நாடாளுமன்றத் தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிடுபவர்கள் மட்டும் உழைக்கவில்லை. பலரின் உழைப்பு அதில் உண்டு. தேர்தல் பிரச்சாரத்திற்கு முன்னரங்கில் வந்து உழைக்காமல் பின்னின்று உழைத்தவர்களும் பலர் உண்டு. தேசத் திரட்சியை உருவாக்க முயன்று வெற்றி கண்டு சில நாட்களில் அது சிதறுண்டு போயுள்ளது. அதற்காக நாம் மக்களிடம் மன்னிப்பு கோருகிறோம். அத்துடன் பொதுக்கட்டமைை தற்போது இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகிறோம், என தெரிவித்தார். (04)



# இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் உயர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

2023 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் (திருத்தத்தின் பிரகாரம்) ஏற்பாடுகளுக்கமைய, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு பணிப்பாளர் தலைமை அதிபதியைத் தெரிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கு தகுதியான நபர்கள் உரிய விண்ணப்பங்களை, பாராளுமன்ற இணையத்தளத்தில் "இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு பணிப்பாளர் தலைமை அதிபதியை நியமித்தல்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள வடிவில் தயாரித்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது constitutionalcouncil@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ வரும் ஒக்டோபர் 28 அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

இது தொடர்பிலான பத்திரிகை அறிவித்தல் நேற்றும் (13) இன்றும் (14) தேசியப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (04)





# சீரற்ற காலநிலை காரணமாக பாடசாலைகளுக்கு விடுமுறை!

## விசேட அறிப்பு வெளியானது

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளம் மற்றும் ஏனைய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை அளிப்பது தொடர்பில் கல்வி அமைச்சு விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவது தொடர்பில் மாகாண பிரதம செயலாளர், மாகாணக் கல்விச் செயலாளர் அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், என கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

தற்போது நிலவும் காலநிலை காரணமாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுக்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)



# பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு மூவருக்கு!

ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு நோபல் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மருத்துவம், இயற்பியல், வேதியல் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு இந்த விருதுகள் அறிவிக்கப்படும்.

அந்த வரிசையில் இந்த வருடத்தில் டரன் அசோமோக்லு, சைமன் ஜோன்சன், ஜேம்ஸ் ஏ.ரொபின்சன் ஆகியோருக்கு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டை வடிவமைப்பதில் அமைப்புகளின் பங்கு பற்றிய ஆராய்ச்சிக்காக அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படவுள்ளது. பலவீனமான சட்டம் மற்றும் சுரண்டல் அதிகம் கொண்ட நாடுகள் பெரியளவில் வளர்ச்சியை அடையாது என்பதை அவர்களின் ஆய்வு நிரூபித்துள்ளது.

அமைப்புகள் எப்படி உருவாகின்றன, அவை எப்படி ஒரு நாட்டின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு காரணமாக இருக்கின்றன, நிலையான வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும்? ஆகியவை குறித்து இவர்கள் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாக நோபல் பரிசு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)




# அதிகரிக்கப்பட்ட உர மானியம் இன்று முதல் வழங்கப்படுகிறது!




அதிகரிக்கப்பட்ட உர மானியத்தை வழங்கும் பணிகள் இன்று முதல் இடம்பெறவுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, முதற்கட்டமாக 15,000 ரூபாவும், இரண்டாம் கட்டமாக 10,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து உர மானியம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் எனவும் அதன் பின்னர் பொலன்னறுவை, அனுராதபுரம், மகாவலி வலயம் உள்ளிட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (04)

# பகுப்பாய்வு பணியகத்தின் பணிப்பாளராக ஷானி அபேசேகர நியமனம் ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிலையம் கேள்வி!



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரான ஷானி அபேசேகரவை, மத்திய குற்றப் புலனாய்வுப் பகுப்பாய்வு பணியகத்தின் பணிப்பாளராக நியமித்தமை தொடர்பாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிலையம் கேள்வி எழுப்பியுள்ளது.

அரசாங்கத்தினால் கடந்த 10 ஆம் திகதி ஷானி அபேசேகரவுக்கு வழங்கப்பட்ட நியமனம் குறித்து ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகள் அமைப்பில் ஷானி அபேசேகர இணைந்து பணியாற்றியதாகக் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், பாராளுமன்ற தேர்தல் தொடர்பில் அறிவிப்பு வெளியான பின்பு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் இந்த அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஷானி அபேசேகர சேவையில் இருக்கும் போது திறமையான அதிகாரியாகக் கருதப்பட்டாலும், பொதுத் தேர்தல் நிறைவடைந்த பின்னர் நடைபெறும் முதல் பாராளுமன்ற அமர்வின் பின்னரே குறித்த நியமனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிலையம் தெரிவித்துள்ளது. (04)

# 14 வயது மாணவியால் பிரதமருக்கு மகஜர்!

14 வயது மாணவியிடமிருந்து பிரதமருக்கு மகஜர் ஒன்றை கையளிக்கப்பட்டுள்ளது

காத்தான்குடியில் இருந்து கொழும்புக்கு சைக்கிளில் வந்த 14 வயது மாணவி பாத்திமா நடா, இன்று பிரதமர் அலுவலகத்தில் வைத்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளார்.

அதில், சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை பாதித்துள்ள போதைப்பொருள் நெருக்கடிக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்குமாறும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (04)



நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557



# வேட்பாளர்களான தாஹிர், நியாஸ் இருவரும் ஒன்றிணைந்தே பயணிக்க மக்கள் கோரிக்கை

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்).

கற்பிட்டி பிரதேசம் பள்ளிவாசல்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.எச்.எம்.நியாஸ் மற்றும் என் டி.எம்.தாஹீர் ஆகிய இருவரும் ஒன்றிணைந்து இத்தேர்தலில் வெற்றி பெறுவதற்கு பயணிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் முன்வைத்துள்ளனர். இருவரும் ஒன்றிணைந்து பயணிக்கும்போது இருவரும் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பு அதிகமாக காணப்படுவதாகத் தெரிவிக்கும் மக்கள், தலைமைகள் பிரிந்து சென்றாலும் கற்பிட்டி பிரதேசம் என்ற வகையில் இருவரும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து இத்தேர்தலில் பயணிக்கும் போது கற்பிட்டி பிரதேச மக்கள் முழுமையான ஆதரவை வழங்குவதற்கு தயாராக உள்ளதாகவும் தெரிவித்தனர். இந்தச் சந்திப்பில் இளைஞர்கள், ஊர் முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.









# 'ரன்விமன' வீடுகள் வழங்கும் நிகழ்வு

(நவாஸ்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியுதவியின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பிரிவுகளில் அமைக்கப்பட்ட ரூபா 7 இலட்சத்து ஐம்பதாயிரம் பெறுமதியான மூன்று வீடுகளை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் பி.ரி. இர்பான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதியாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.ஏ.சி. அஹமது ஷாபீர் கலந்துகொண்டதுடன், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர், திட்ட முகாமையாளர், வலய முகாமையாளர்கள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சர்வதேச முதியோர் தினத்தையொட்டி சிரேஷ்ட பிரஜைகள் கௌரவிப்பு



(காரைதீவுச் செய்தியாளர்)

சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தினத்தையொட்டி திருக்கோவில் பிரதேச காயத்ரி கிராமம் மற்றும் மண்டானை கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 200 சிரேஷ்ட பிரஜைகளுக்கு பரிசு வழங்கி கௌரவம் அளிக்கப்பட்டது. திருக்கோவில் சமூக தரிசன நிறுவனம் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தது.

சமூக தரிசன நிறுவன ஸ்தாபக தலைவர் பி.நந்தபாலு தலைமையில் காயத்ரி கிராமம் சமூக தரிசன நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது..

ஆன்மீக அதிதிகளாக சிவஸ்ரீ கிருபாகரக் குருக்கள், திருநாவுக்கரசு நாயனார் குருகுலப்பணிப்பாளர் கண.இராஜரெத்தினம் (கண்ணன்) ஆகியோரும், கௌரவ அதிதிகளாக முன்னாள் காரைதீவு தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பொத்துவில் உப தவிசாளர் பெருமாள் பார்த்திபன், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா ஆகியோரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## கலாசாலையில் மானம்பு உற்சவமும் வாணி விழாவும்







கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்து மன்றம் நடத்திய வாணி விழாவும் கலாசாலை சிவன் ஆலய மானம்பு உற்சவமும் கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை கலாசாலையில் நடைபெற்றன.

முன்னதாக யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விஜயதசமி பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. ஆயுத பூசை, மானம்பு உற்சவம் என்பன இடம் பெற்று அதனைத் தொடர்ந்து சிறார்களுக்கான ஏடு தொடக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

மானம்பு உற்சவத்தை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் நடத்தி வைத்தார். கலாசாலை அதிபர் ச.லலீசன் சிறார்களுக்கு அட்சர ஆரம்பம் செய்து வைத்தார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசாலையின் பழைய மாணவரும் அதிபர் சேவை உத்தியோகத்தருமான க.கைலைநாதன் கலந்து கொண்டார்.

கலாசாலை வாயிலில் எழுந்தருளி உள்ள சரஸ்வதி திருவுருவச் சிலைக்கு பிரதமர் விருந்தினர் மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

நிகழ்வில் இந்து மன்ற காப்பாளர் கு.பாலசண்முகன் தொடக்கவுரை ஆற்றினார். கலாசாலையின் பிரதி அதிபர் த.கோபாலகிருஷ்ணன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் சைவப் பாரம்பரியம் என்ற பொருளில் உரை நிகழ்த்தினார்

சிறப்பு நிகழ்வாக, விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமாரின் நெறியாள்கையில் ஆசிரிய மாணவர்கள் வழங்கிய "கல்வியா? செல்வமா? வீரமா?" என்ற நாடகம் இடம்பெற்றது.

நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மாகேஸ்வர பூசை (அன்னதானம்) இடம்பெற்றது.

## மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நடை பேரணி






கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நடை பேரணி இன்று இடம்பெற்றது.

தருமபுர வைத்தியசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு கண்டாவளைப் பிரதேச செயலகம் வரை இந்தப் பேரணி சென்று, அங்கு மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் நடைபெற்றது.

பிராந்திய தொற்றுநோய் வைத்தியர் க.றஞ்சன், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதாரப் பரிசோதகர்கள், வைத்தியர்கள், இராணுவத்தினர், பொலிசார், தாதியர்கள், கண்டாவளை பிரதே செயலக உத்தியோகத்தர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை மாணவர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும்பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்தப் பேரணியிலும் நிகழ்விலும் கலந்து கொண்டனர். (113)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்







## திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் 2024ம் ஆண்டுக்கான குடிசன தொகை மதிப்பீடு ஆரம்பம்!

(ஹஸ்பர் ஏ.எச்)


2024 ஆம் ஆண்டுக்கான குடிசன தொகை மதிப்பீடானது திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் இன்று பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தம்பலகமம் பிரதேச செயலக பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் குறித்த குடிசன தொகை மதிப்பீடு இடம்பெற்றது. இலங்கையில் மேற கொள்ளப்படுகின்ற 15 ஆவது மக்கள் தொகை கணக்கெடுப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட வெளிக்கள உத்தியோகத்தர்கள், குடிசன மதிப்பீட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.

## தலவாக்கலை சென்கூம்ஸ் பாடசாலைக்கு கணிணித் தொகுதி, தளபாடம் அன்பளிப்பு





(பி.கேதீஸ்)

தலவாக்கலை சென் கூம்ஸ் பாடசாலையின் பழைய மாணவரும் புஸ்சல்லாவ தேசிய பாடசாலையின் ஆசிரியருமான மனோபிரகாஷ் ஊடாக WSO2 மென்பொருள் நிறுவனத்தின் அனுசரனையில், தலவாக்கலை சென்கூம்ஸ் பாடசாலைக்கு கணிணித் தொகுதிகள் மற்றும் கணிணித் தளபாடங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுகள் பாடசாலையின் அதிபர் தங்கராஜ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது WSO2 நிறுவன ஸ்தாபகர் மற்றும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பிரசன்னமாயிருந்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.10.2024 இல் வெளியிடப்பெற்றது.